ISSN : 2456-821X அவையம் 2(2) 2018 P.NO. : 60-66




# சவ்வாது மலைவாழ் மக்களின் தெய்வ வழிபாடு

**முனைவர் க. மோகன்காந்தி**

*உதவிப் பேராசிரியர்*
*தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத் துறை*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்*
*வேலூர் மாவட்டம்.*

**கட்டுரை பெறப்பட்டது : 27.10.2018** **ஏற்கப்பட்டது : 10.11.2018**

## முன்னுரை

இந்தியாவின் பழமைமிகு மலைகளில் கிழக்குத் தொடர்ச்சி மலைகளுக்குத் தனிச் சிறப்பிடம் உண்டு. இக்கிழக்குத் தொடர்ச்சி மலைகள் உயரம் குறைத்தும் இடைவெளிகள் நிறைந்தும் காணப்படுகின்றன. கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் ஒரு கூறான ஜவ்வாதுமலை வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் பரந்து, விரிந்து காணப்படும் மலைத்தொடராகும். இம்மலை வடக்கே அமித்தியையும், தெற்கே சிங்காரப்பேட்டையையும், கிழக்கே தும்பக்கோட்டையும் (போளூர்), மேற்கே ஆலங்காயத்தையும் எல்லைகளாக்க் கொண்டு காட்சித் தருகிறது. இம்மலையில் 282 சிற்றூர்கள் உள்ளன. இம்மலையில் வேடியப்பன், வேந்தியப்பன், காளியம்மன், திக்கியம்மன், துர்கையம்மன், ஆஞ்சநேயரப்பன், சிவன், முருகன், பெருமாள் என்று ஏராளமான தெய்வங்கள் வணங்கப்பட்டு வருகின்றன. இவ்வாய்வுக் கட்டுரை ஆய்வு எல்லைக் கருதி புதூர் நாட்டிற்கு உட்பட்ட கீழூர் சிற்றூரிலுள்ள வேந்தியப்பன், தப்பிரான் வேட்டைச்சாமி முன்னோர் வழிபாடு ஆகிய தெய்வங்களை ஆராய்கிறது.

*1.* **வேந்தியப்பன்**

*கீழூர் மக்களின் வாழ்வியலில் இரண்டற கலந்துள்ள குலத்தெய்வம் வேந்தியப்பன். வேந்து + அப்பன் = வேந்தியப்பன் என வந்ததாகக் கருத முடிகிறது. பரந்த சமவெளியில் ஆலமரத்தின் அருகாமையில் இக்கோயில் அமைந்துள்ளது. வெளியிலுள்ள ஒரு சிலை கையில் வில்லும், கத்தியும் ஏந்தி புலி வாகனத்தில் அமர்ந்துள்ளது. இத்தெய்வத்தை இவ்வூர் மக்கள் வேந்தியப்பன் என்கின்றனர். இச்சிலை சிமெண்ட்டால் செய்யப்பெற்றுள்ளது. இச்சிலைக்குப் படையலாக வாழைப்பழம், பூ, வெற்றிலைப்பாக்கு, ஊதுவத்தி, பொறி, வெல்லம் ஆகியவற்றுடன் பூமாலைகளைச் சூட்டி இத்தெய்வத்தை வழிபடுகின்றனர்.*

*கோயிலின் கருவறையில் அரசகோலத்தில் வேந்தியப்பன் காட்சித் தருகிறார். இக்கற்சிலை நடுகல் போல் தோற்றமளிக்கிறது. இவ்வூரில் வாழ்ந்த இனக்குழுத் தலைவன் (அ) அரசன் இவ்வூரைச் காத்துப் போரில் உயிர் விட்டிருக்க வேண்டும் எனவே மக்கள் தங்கள் தலைவனைக் கடவுளாக வழிபட்டிருக்க வேண்டும். (போர் வீரனாக இருந்திருந்தால் வேடியப்பன் என்று வழங்கியிருப்பர். இவர் அரசர் என்பதால் வேந்தியப்பன் என்கின்றனர் என அறியலாம்)*





**வேந்தியப்பன் தோற்றக் கதை**

*இவ்வூர் மக்கள் வேந்தியப்பன் என்ற பெயரில் 2 தெய்வங்களை வணங்குகின்றனர். கீழூர் சிற்றூர் வேலூர் மாவட்டத்தில் இருந்தாலும் திருவண்ணாமலை மாவட்டம் செங்கத்திற்கு மிகவும் அருகாமையில் அமைந்துள்ளது. இன்றைக்கும் இவ்வூர் மக்கள தங்களின் வேளாண் பொருட்களைத் தலையில் சுமந்து கொண்டு செங்கும் பகுதிக்கு எடுத்துச் செல்வதைக் கள ஆய்வின் மூலம் அறிய முடிகிறது. கீழூரிலிருந்து மலைவழிப் பாதையில் நடந்து சென்று வலசை என்கின்ற சிற்றூரை அடைகின்றனர். இவ்வூரில் பெரிய ஆலமரத்தின் அடியில்*

அடிமலை வேந்தியப்பன் கோயில் உள்ளது. இத்தெய்வமும் அரசகோலத்திலேயே காணப்படுகிறது. இக்கோயில் அருகாமையில் ஓடும் நீரோடையை வேந்தன் கல்லாறு என்று வழங்குகின்றனர். முதன்முதலில் கீழூர் மக்கள் வலசைக்குச் சென்று அடிமலை வேந்தியப்பனை வணங்கி வந்துள்ளனர். ஒருமலையை ஏறி இறங்கி வழிபடுவது சிரமமாக இருந்த காரணத்தினால் அத்தெய்வத்தைத் தங்கள் ஊருக்கே அழைத்துச் சென்று வந்துவிட்டதாக ஊர்ப் பெரியவர் வேந்தன் (வயது 70) கூறுகிறார். மேலும் கீழூர் வேந்தியப்பனுக்குச் சித்திரை மாதத்தில் விழா எடுத்த எட்டாவது தினத்தில் ஊரிலுள்ள பெரியவர்கள் சிலர் அடிமலை வேந்தியப்பனுக்கு மலர் வழிபாடு (பூஜை) செய்து விட்டு வருவோம்'' என்று கூறுவது நோக்கத்தக்கது.

**வேந்தியப்பன் செல்வாக்கு**

வேந்தியப்பன் தெய்வம் கீழூர் மக்களுக்குக் குல தெய்வமாக விளங்குகிறது. காது குத்துதல், மொட்டை அடித்தல் போன்ற சடங்குகளை இக்கோயிலில் இவ்வூர் மக்கள் செய்கின்றனர். குறிப்பாக இவ்வூர் மக்கள் தங்களின் குழந்தைகளுக்கு வேந்தன் (வேந்தியப்பனின் சுருக்கம்) என்று பெயர் சூட்டுவது பெரு வழக்காக உள்ளது. ஒரே குடும்பத்தில் அண்ணன், தம்பிகளுக்கு வேந்தன் என்று பெயர் சூட்டுகின்றனர். சில குடும்பங்களில் தந்தை – மகன்களின் பெயர்களும் வேந்தன் என்றே வைக்கப்படுகிறது. பிறந்த குழந்தைகளுக்கு முதலில் வேந்தியப்பன் என்று பெயர் சூட்டிய பின்னரே வேறு பெயர்களை வைக்கும் வழக்கமும் உள்ளது. பெண் குழந்தையாக இருந்தால் வேந்தியம்மாள் என்றும் பெயர் சூட்டுகின்றனர். இதன் மூலம் இவ்வூர் மக்களின் வாழ்வியலில் வேந்தியப்பன் பெற்றுள்ள செல்வாக்கை அறிய முடிகின்றது.

AD BONUM OMNE INST OPUS RETI SACRED HEART COLLEGE



**வேந்தியப்பன் வழிபாட்டுமுறை**

*“சித்திரை மாதத்தில் ஊர்ப் பெரியோர்களால் கூடி முடிவெடுக்கப்பட்டு இம்மாதத்தில் திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில் வேடியப்பன் திருவிழா நடைபெறுகிறது” என்று பேராசிரியர் வேந்தன் (25) கூறுகிறார். இவர் கூறுவது போன்றே இவ்வாண்டு 2018 சித்திரை மாதம் 11,12 தேதிகளில் செவ்வாய், புதன் ஆகிய இரண்டு நாட்கள் (ஏப்ரல் 24, 25) திருவிழாக் கொண்டாடப்பட்டுள்ளது.*

*இத்திருவிழாவின்போது வேந்தியப்பன் கோயிலைச் சுற்றியுள்ள இடங்களில் பெண்கள் நூற்றுக்கணக்கானோர் முதல் நாள் இரவு பானைகளில் பொங்கலிடுகின்றனர். மறுநாள் காலை முதல் இரவு வரை வேந்தியப்பனுக்கு வழிபாட்டுச் சடங்குகள் நடைபெறுகின்றன. ஊர்மக்கள் ஒன்று கூடி, சாமியாடி அருள் வந்து வேந்தியப்பனை வணங்கி குருதிச் சோற்றை இறைக்கிறார். பின்னர் பலர் தத்தம் வேண்டுதலுக்காகத் தாங்கள் வளர்க்கும் ஆட்டுக் கிடாய்களைக் கோயிலின் முன் நிறுத்துகின்றனர். கோயிலுடன் நெருக்கமுடைய சிலர் அந்த ஆட்டுக் கிடாக்களின் தலைகளை வெட்டித் துண்டித்துப் பலியிடுகின்றனர். பின்னர் ஆட்டுக்கு உரியோர் ஒரு நீண்ட கொம்புகளில் ஆட்டின் நான்கு கால்களையும் ஒன்றாகக் கட்டி இரண்டு பேராகத் தங்கள் வீடுகளுக்குத் தூக்கிச் செல்கின்றனர். ஆடு பலி தரும் நிகழ்ச்சி முடிந்த பின்னரே, முந்நாள் இரவு இடப்பட்ட பொங்கல் பானைகளை ஊர் மக்கள் தங்கள் வீடுகளுக்கு எடுத்துச் செல்கின்றனர்.*

ஊர்த் திருவிழாவிற்கு அவ்வூர் மக்கள், மலையிலுள்ள பிற ஊர் உறவினர்களையும் கீழ் நாட்டிலுள்ள (மலையல்லாத சமவெளி மக்கள்) நண்பர்களையும் திருவிழாவிற்கு முன்பே ஒரு தட்டில் அரிசி கொடுத்து அழைப்பு விடுக்கின்றனர். அவ்வழைப்பை ஏற்று வரும் மக்களைத் தங்கள் இல்லங்களில் உணவுடன் பலியிட்ட ஆட்டிறைச்சியைத் தந்து பகுத்து உண்டாலும், பொங்கல் சோற்றை ஒரு பிடியாவது உண்டால் தான் தெய்வத்தின் அருள் கிட்டும் என்று நம்புகின்றனர்.

***2. தம்பிரான் வேட்டைச்சாமி***

வேந்தியப்பன் கோயிலுக்கு அருகாமையிலேயே தம்பிரான் கோயில் உள்ளது. பூ, வாழைப்பழம், ஊதுபத்தி, பொறி, கடலை, தேங்காய், வெல்லம் உள்ளிட்டப் பொருட்களை வாழை இலையில் வைத்துப் படையலிடுகின்றனர். இத்தெய்வம் மூன்று கற்களில் வடிவமைக்கப்பட்டு குங்குமம், சந்தனம், பூமாலை சார்த்தி நாமமிடப்பட்டுள்ளன. வேந்தியப்பன் கோயிலுக்கும் இத்தெய்வம் பழமையுடையது என்பதால் முதல் வழிபாடு இத்தெய்வத்திற்கே வழங்கப்படுகிறது. மலைவாழ் மக்களின் முக்கியத் தொழில்களில் ஒன்று வேட்டையாடுவது. வேட்டைக்குச் செல்லும்போது எவ்வித ஆபத்தும் நேராமலிருக்கவும், விரைவில் வேட்டை விலங்கு கிடைக்க வேண்டும் என்றும் இத்தெய்வத்தை வணங்கி விட்டு இவ்வூர் மக்கள் செல்கின்றனர். கிடைக்கும் வேட்டை விலங்கை மூன்று கூறுகளாகப் பிரித்து, மூன்றில் ஒன்றை வேட்டை ஆடியவரும், இரண்டு பங்கை ஊர் மக்களும் பிரித்துக் கொள்வர்'' என்று திரு ரே.கோவிந்தராஜ் (30) கூறுகிறார்.



மலைவாழ் மக்களிடையே பகுத்துண்ணும் இனக்குழு எச்சத்தை இக்கூற்று மெய்ப்பிக்கிறது. தற்போதைய சூழலில் வேட்டைக்கு அரசு தடை விதித்திருப்பதாலும் வேட்டை விலங்குகள் வெகுவாக குறைத்துள்ள காரணத்தினாலும் தற்போது வேட்டையாடுவது குறைந்துள்ளதை அறிய முடிகிறது.

### 3. முன்னோர் வழிபாடு

தமிழ்ச் சமூகத்தில் நீண்ட நெடிய காலமாக இறந்த முன்னோரை வழிபடும் மரபு இருந்து வருகிறது. வரலாற்றிற்கு முந்தைய காலத்தில் கற்திட்டை, கற்குவியல், முதுமக்கள் தாழி வடிவில் முன்னோரைப் புதைத்தனர். பிறகு நடுகல்லாக வழிபட்டனர். இன்றைக்கும் இறந்த முன்னோரை நினைத்து வழிபடும் வழக்கம் தமிழகத்தில் பரவலாகக் காணப்படுகிறது.



சவ்வாதுமலை மக்கள் தத்தம் வீடுகளில் சுவற்றில் கோலமிட்டு இறந்தவர்களுக்கு, இக்கோலத்தில் இடப்படும் பொட்டுகள் மூலமாக இறந்தோரின் எண்ணிக்கையைக் குறித்து வைக்கின்றனர். இன்னும் சிலர் வீடுகளில் மூன்று விதமான கோலமிட்டு நடுவில் தந்தை வழியில் இறந்தோருக்கான எண்ணிக்கையைப் பொட்டு வடிவிலும், அதன் இடது பக்கத்தில் தாய் வழி உறவினர்களின் இறப்பையும், வலது புறத்தில் ஒரு பொட்டை வைத்து அது சித்திர குப்தனுக்கானது என்றும் கூறுகின்றனர். சித்திரகுப்தன் என்பவர் எமனின் உதவியாளர் ஆவார். இவர் தான் மனிதர்களின் இறப்பைக் குறித்து வைப்பவர். எனவே அவரைத் தெய்வமாக வழிபட்டால் தங்களுடைய இறப்பைச் சற்றுத் தள்ளிப் போடுவார் என்ற நம்பிக்கை இம்மக்களிடம் காணப்படுவதை அறியமுடிகிறது. இது தொன்மம் சார்ந்த பதிவாக உள்ளது.

இக்கோலங்களுக்கு அருகாமையில் நீர் நிரம்பிய குடம் ஒன்று உள்ளது. நாள்தோறும் புது தண்ணீரை இதில் வைக்கின்றனர்.

***முடிவுரை***

சவ்வாது மலைவாழ் மக்கள் தங்களுடைய வாழ்வியலில் தெய்வங்களுக்கான சடங்குகளையும் நம்பிக்கைகளையும் ஆழமாகக் கொண்டுள்ளனர். தெய்வங்கள் தான் தங்களை வழிநடத்துகின்றன என்ற கோட்பாட்டில் உறுதியாக உள்ளனர். வேந்தியப்பன் மற்றும் தம்பிரான் வேட்டைச்சாமி வழிபாடு இரண்டும் இனக்குழுவினரிடையே ஒற்றுமையையும் பகுத்துண்ணும் பங்கீட்டு முறையையும் வளர்ப்பதாக உள்ளது. சங்க காலம் தொட்டு இனக்குழு மக்களிடையே தொன்று தொட்டு வரும் பண்புகளில் ஒன்று பங்கீட்டு முறை இதை இன்றளவும் சவ்வாது மலை பழங்குடி மக்கள் தங்கள் வாழ்வியலோடு இணைத்து வாழ்வது ஆய்வின் மூலம் அறிய முடிகிறது. மரபு சார்ந்த முன்னோர் வழிபாட்டில் தாய் வழி, தந்தை வழி உறவுகளையும் அச்சத்தின் காரணமாக சித்திரகுப்தன் வழிபாட்டுமுறைத் தொன்மமாகவும் இவர்களின் வாழ்வியலில் கலந்துள்ளதை அறிய முடிகிறது.

தகவலாளர் பட்டியல்

1. கோவிந்தன் வயது 65, கீழூர், சவ்வாதுமலை
2. வேந்தன், வயது 70, கீழூர், சவ்வாதுமலை
3. வேந்தன், வயது 25, ஆய்வு மாணவர், கீழூர், சவ்வாது மலை
4. ரே.கோவிந்தராஜ், வயது 30, உதவிப் பேராசிரியர், தியகராசர் கல்லூரி, மதுரை.